### பெட்ரோல், டீசல், சி.என்.ஜி. விலை உயர்வு!

# மக்கள் மீதான சுமையைக் குறைக்க நடவடிக்கை எடுப்பீர்!

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!



**சென்னை, மே 17-**

**பெட்ரோல், டீசல், சி.என்.ஜி. விலையை உயர்த்திய ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துக் கொண்டுள்ளார்.**

**இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மக்கள் மீதான இந்தச் சுமையை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளார்.**

**இது தொடர்பான அறிக்கையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளதாவது:**



ஏழை - எளிய - நடுத்தர வர்க்க மக்களைப் பாதிப்புக்கு உள்ளாக்கும் வகையில் *Petrol, Diesel, CNG* விலையை ஒன்றிய அரசு உயர்த்தி இருப்பதை வன்மையாக கண்டிக்கிறோம்.

இந்த விலை ஏற்றத்தின் மூலம் நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்கிவிட்டு, 'பொறுத்துக்கொள்ளுங்கள், அதைச் செய்யாதீர்கள், இதைச் செய்யாதீர்கள்' என்று ஒன்றிய அரசு அறிவுரை கூறுவது, தனது தோல்வியை மறைக்கும் முயற்சியே ஆகும்.

மக்கள் மீது ஏற்றப்பட்டுள்ள இந்த சுமையை குறைக்க உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.


### தஞ்சைத் தரணிக்கு வருகை தரும்

# கழகத் தலைவர் - எதிர்க்கட்சித் தலைவருக்கு பிரமாண்ட வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர்கள் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. - பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. - மாவட்டப் பொறுப்பாளர்கள் சாக்கோட்டை க.அன்பழகன் - தி.பழநிவேல் கூட்டறிக்கை!









தஞ்சாவூர், மே 17 -

தஞ்சையில் நடைபெற உள்ள திருவாரூர் மாவட்டக் கழக முன்னாள் செயலாளர் மறைந்த பூண்டி கலைச்செல்வன் இல்ல திருமண விழாவிற்கு வருகை தரும் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், கழக இளைஞர் அணியின் செயலாளர் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் பிரமாண்ட வரவேற்பு அளிக்கும் நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டி தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தஞ்சை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன், தெற்கு மாவட்ட பொறுப்பாளர் தி.பழநிவேல் ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் நாளை (18.05.2026 திங்கள்), காலை 10.00 மணியளவில் தஞ்சாவூர் மஹாராஜா மஹாலில் திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. அவர்களுடைய சகோதரரும், கழக செயல் மறவருமான மறைந்த பூண்டி கே.கலைச்செல்வம் அவர்களுடைய மகள் கலை அழகி - ராம் பாலாஜி ஆகியோரின் திருமண விழாவை நடத்தி வைத்து வாழ்த்துரை வழங்க தஞ்சை மாநகருக்கு வருகை தரும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களையும், தமிழ்நாடு எதிர்க் கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் வரவேற்கும் வகையில் இன்று (17.05.2026 ஞாயிறு) மாலை 5.00 மணியளவில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக நுழைவு வாயிலில் பிரமாண்ட வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வரவேற்பு நிகழ்ச்சியில் தஞ்சை வடக்கு, மத்திய, தெற்கு மற்றும் திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் ஒன்றிய, மாநில அமைச்சர்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகரச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பகுதி, பேரூர் மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக பிரதிநிதிகள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர்கள் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., பொறுப்பாளர்கள் சாக்கோட்டை க.அன்பழகன், தி.பழநிவேல் ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

### வருகிற 19ஆம் தேதி

# மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பி.மூர்த்தி அறிவிப்பு!

மதுரை, மே 17-

வருகிற 19ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மதுரை வடக்கு மாவட்ட திமுக செயல்வீரர்கள் கூட்டம் ஆலாத்தூரில் நடைபெற உள்ளதாக மாவட்டச் செயலாளர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார். அதன் விபரம்

மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம் வருகிற 19.05.2026 செவ்வாய் கிழமை காலை 10 மணி அளவில் ஆலத்தூர் பி.ஆர். திருமண மஹாலில் கழக அவைத் தலைவர் எம்.ஆர். எம்.பாலசுப்ரமணியன் தலைமையில் நடைபெற உள்ளது

இக்கூட்டத்தில் சென்னையில் கடந்த 14ஆம் தேதி கழக தலைவர் தலைமையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்ட தீர்மானங்கள் குறித்தும், 2026சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்தும், கழக ஆக்கப் பணிகள் குறித்தும் ஆலோசனை நடத்தப்பட உள்ளது



எனவே கூட்டத்தில் மதுரை வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள் நிர்வாகிகள் என அனைவரும் பங்கேற்று வேண்டுமென மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் பி.மூர்த்தி தனது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### தஞ்சை வரும் கழகத் தலைவருக்கு

# திருவாரூர் மாவட்டக் கழகத்தினர் சிறப்பான வரவேற்பு!

திருவாரூர், மே.17-

திருவாரூர் மாவட்ட கழக முன்னாள் செயலாளர் மறைந்த பூண்டி கலைச்செல்வன் அவர்களின் இல்ல திருமண விழாவிற்கு வருகை தரும் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், கழக இளைஞர் அணியின் செயலாளர் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், தலைமை கழக நிர்வாகிகளுக்கும் திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட கழகத்தின் சார்பில் தஞ்சாவூரில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் "மீண்டு வருவோம் மீண்டும் வருவோம்" என்கிற சூளுரையோடு சட்டமன்ற தேர்தலுக்குப்பின், முதன்முறையாக தஞ்சை மாநகருக்கு, திருவாரூர் மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ அவர்களுடைய சகோதரரும் கொரடாச்சேரி பேரூர் கழகத்தினுடைய செயலாளர் பூண்டி.கே. கலைவேந்தன் அவர்களுடைய தந்தையாரும், கழக செயல் மறவருமான மறைந்த பூண்டி கே. கலைச்செல்வம் அவர்களுடைய மகள் கலை அழகி ராம் பாலாஜியோடு கரம் கோர்க்கும் திருமண நிகழ்வுக்கு தலைமை ஏற்க வருகை தரவுள்ளார்கள்.

நாளை (18.05.2026 - திங்கள்) காலை 9.00 மணிக்கு, திராவிட நாயகர் கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுடைய சீரிய தலைமையில் தஞ்சாவூர் மகாராஜா மஹாலில் நடைபெற உள்ள இந்த திருமண விழாவிற்கு கழக இளைஞர் அணி செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், பொதுச் செயலாளர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மை செயலாளர் கே.என். நேரு, கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்பி. மற்றும் தலைமைக் கழக நிர்வாகி கள் முன்னிலை ஏற்க இருக்கின்றனர்.

திருமண விழாவில் பங்கேற்க வருகை தரும் கழகத் தலைவர் திராவிட நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், கழகத்தினுடைய இளைஞர் அணி செயலாளர் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், தலைமை கழக நிர்வாகி களுக்கும் திருவாரூர், தஞ்சாவூர், உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளும் கழகத் தோழர்களும் திரண்டு வந்து மாபெரும் வரவேற்பு அளிக்கின்றனர்.

### அ.தி.மு.க. ஆட்சியில் போடப்பட்ட பொய் வழக்கு:

# முன்னாள் தி.மு.க. எம்.எல்.ஏ., நா.கார்த்திக், கோவை நீதிமன்றத்தில் ஆஜர்!

கோவை, மே 17-

அதிமுக ஆட்சியில் கடந்த 2018ம் ஆண்டு சூலூர் கண் ணம்பாளையத்தில் குட்கா தயாரிப்பு ஆலை செயல்பட்டு வந்தது. இதனை கண்டித்து திமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. இதைத்தொடர்ந்து அப்போதைய சிங்காநல்லூர் தொகுதி திமுக எம்.எல்.ஏ. நா.கார்த்திக் உட்பட சிலர் மீது அதிமுக அரசு பொய் வழக்கு போட்டது. இது தொடர்பான வழக்கு விசாரணை கோவை ஜே.எம்.1 நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கு விசாரணைக்காக திமுக மாநில தீர்மான குழு செயலாளரும், முன்னாள் எம் எல் ஏ வுமான நா.கார்த்திக் ஆஜர் ஆனார்.

அப்போது பள்ளபாளையம் பேரூராட்சி தலைவர் செல்வராஜ்,தெற்கு மாவட்டபிரதிநிதி மாதப்பூர் தங்கராஜ்,ராவத்தூர் செல்வராஜ், பாப்பம்பட்டி பரமசிவம், மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் அன்பு செழியன், வழக்கறி ஞர்கள் மதிவாணன், ராஜமாணிக்கம், ஹேமந்த்குமார், குணசேகரன், ராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலினை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக நியமித்த கழகத் தலைவருக்கு நன்றி -

## கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

## மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ், எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினர்!

கன்னியாகுமரி, மே 17-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் ஆலோ சனைக் கூட்டமானது 15.05.2026, வெள்ளிக்கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் எப்.எம்.இராஜரெத்தினம் தலைமையில் நாகர் கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப. ஆனந்த் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினர்களாக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ், நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் எஸ்.ஆஸ்டின் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினார்கள்.

கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட பொருளாளர் ஐ.கேட்சன், துணை செயலாளர்கள் எஸ்.கரோலின் ஆலிவர்தாஸ், ஏ.ஆர்.பூதலிங்கம் பிள்ளை, எம்.சோமு, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ரா.பார்த்தசாரதி, ஆர்.சதாசிவன், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.மதியழகன், பா.பாபு, மோ.பிராங்கிளின், த.செல்வன், ஏ.சுரேந்திர குமார், பி.எஸ்.பி.சந்திரா, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் ச.சுந்தர்சிங், ஜெ.மிலன், நகர கழக செயலாளர்கள் நாகூர் கான், குமரி ஸ்டீபன், பகுதி கழக செயலாளர்கள் இ.ஜவகர், த.ஜீவா, மு.சேக்மீரான், என்.பி.துரை மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

**தீர்மானம்: 1**

கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டப்பேரவை கட்சி தலைவராக தேர்வு செய்தும், தமிழ்நாடு சட்டமன்றத்தின் எதிர்கட்சி தலைவராகவும் பணியாற்றிட வாய்ப்பு அளித்த கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம்: 2**

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட கன்னியாகுமரி, நாகர்கோவில், குளச்சல் ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளிலும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் மற்றும் தீவிர வாக்கு சேகரிப்பில் தீவிர களப்பணியாற்றிய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியின் அனைத்து நிர்வாகி களுக்கும், தோழர்களுக்கும் குறிப்பாக நமது கழகத்தை சார்ந்த மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகி கள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC, BDA, SBDA-க்கள், தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், சமூக பொது அமைப்புகள், தன்னார்வ இயக்கங்கள், மகளிர் அமைப்புகள் ஊடகவியல் தோழர்கள் என அனைவருக்கும் இக்கூட்டம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம்: 3**

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3ம் தேதி அன்று கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழகம் மற்றும் சார்பு அணிகளின் சார்பாக தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவபடத்தினை வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதோடு இனிப்புகள் வழங்கியும் நலிந்த ஏழை எளியவர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி சீரும் சிறப்புமாக பிறந்தநாளை வெகு விமரிசையாக கொண்டாட வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

# திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## செயலாளர் க.தேவராஜி அறிவிப்பு!

திருப்பத்தூர், மே 17-

திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டமானது வாணியம்பாடியில் உள்ள மாவட்டக் கழக அலுவகத்தில் நாளை (18.05. 2026 - திங்கள் கிழமை) காலை 10.00 மணியளவில் மாவட்ட அவைத்தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன் தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள்,



தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் தேர்தல் பணிக் குழு ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பொருள் :

1.முத்தமிழறிஞர் தமிழினத்தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா குறித்து,

2.நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வுக்குழு வருகை குறித்து,

3.நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து ஆராய்தல்,

4.கழக ஆக்கப்பணிகள்.

குறிப்பு : தேர்தல் பணிக் குழு ஒருங்கிணைப்பாளர்கள் தங்களின் பணிக்குழுவில் உள்ள வாக்குச்சாவடி களின் தேர்தல் முடிவுகள் அடங்கிய பட்டியல் எடுத்து வரவும்.

இவ்வாறு தனது அறிக்கையில் திருப்பத்தூர் மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி தெரிவித்துள்ளார்.





கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் எப்.எம்.இராஜரெத்தினம் தலைமையில் மாவட்ட கழக அலுவலகத்தில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலையில் மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ், நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் எஸ்.ஆஸ்டின் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினார்கள். கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் ஐ.கேட்சன், துணை செயலாளர்கள் எஸ்.கரோலின் ஆலிவர்தாஸ், ஏ.ஆர்.பூதலிங்கம்பிள்ளை, எம்.சோமு, ரா.பார்த்தசாரதி, ஆர்.சதாசிவன், எம்.மதியழகன், பா.பாபு, மோ.பிராங்கிளின், த.செல்வன், ஏ.சுரேந்திரகுமார், பி.எஸ்.பி.சந்திரா, ச.சுந்தர்சிங், ஜெ.மிலன், நாகூர்கான், குமரி ஸ்டீபன், இ.ஜவகர், த.ஜீவா, மு.சேக்மீரான், என்.பி.துரை மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

# மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி அறிவிப்பு!

மதுரை, மே 17–

மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் 19 .05.2026 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணி அளவில் அண்ணாநகர் ட்வின்ஸ் மஹாலில், அவைத்தலைவர் மா.ஒச்சு பாலு தலைமையில் நடைபெற இருப்பதால் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்டக் கழகச் செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள்



துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :

மாவட்டக் கழகக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் கள ஆய்வுக் குழு வருகை சம்மந்தமாக.

ஜூன் 3 முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா குறித்து.

கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் கூறிப்பிட்டுள்ளார்.